# SUBORDINATE COURT, PADMANABHAPURAM

## CASE NO.SC.234/2016

## Deposition of P.W. 2

Name : திருமதி. உஷா

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:**23.10.2024**

Accused Present

முதல் விசாரணை–

நான் தற்சமயம் தூத்துக்குடி மாவட்ட வழங்கல் அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்னர் 13.09.2012ம் தேதி கல்குளம் வட்டாட்சியாளராக பணிபுரிந்த போது மாவட்ட ஆட்சியர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் உத்தரவு படி அனுமதியின்றி பாறை உடைப்பதாக வரப்பெற்ற தகவலின் அடிப்படையில் வருவாய் ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலர், கிராம உதவியாளர் மற்றும் வட்ட துணை ஆய்வாளர், குறுவட்ட அளவர், உதவி புவியியலாளர், துணை இயக்குனர் கனிமம் ஆகியவர்கள் கூட்டாக வேளிமலை கிராம சோழாபுரம், கொற்றிக்கோடு குளத்திற்கு அருகே புல எண்.3/4பி–யில் புலத்தணிக்கை செய்தார்கள். பாறை வெட்டி எடுக்கப்பட்டது கண்டறியப்பட்டது. அரசு அனுமதியில்லாமல் பாறை வெட்டி எடுக்கப்பட்டது தொடர்பாக காவல்துறையில் புகார் கொடுக்கும் படி கிராம நிர்வாக அலுவலருக்கு அறிவுரை வழங்கினேன். அதன் படி கிராம

நிர்வாக அலுவலர் திருமதி. சந்திர பிரபா அவர்கள் காவல்துறையில் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

சம்பவ சமயம் நான் வட்டாட்சியராக பணிபுரிந்து வந்தேன். 10.02.2012 முதல் 24.02.2013 வரை கல்குளம் வட்டாட்சியராக பணிபுரிந்து வந்தேன். பாறையானது ஒரு பெரிய நிலத்தின் ஒரு பகுதியில் இருக்கிறது என்றால் சரிதான். கல் உடைக்கும் உரிமம் நில உரிமையாளரை தவிர வேறு நபர்களுக்கும் கொடுக்கப்படலாம். புல எண். 3/4பி–யில் பாறை உடைப்பதற்கு முறையான உரிமம் வழங்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். ஆனால் ஆய்வு காலத்தில் முறையான உரிமம் இல்லை. எவ்வளவு பாறை வெட்டி எடுக்கப்பட்டது என்பது பற்றி கனிம வள அதிகாரிக்கு தெரியும் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. உரிமம் உள்ள காலத்தில் எவ்வளவு கற்கள் வெட்டப்பட்டது என்பது பற்றிய விபரம் இருக்கும் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. இறுதியாக வெட்டி எடுக்கப்பட்ட கற்களின் அளவோடு ஆய்வு செய்த நாளன்று கிடைத்த அளவை ஒப்பிட்டு அறிக்கை வழங்கப்படவில்லை. மேற்கண்டவாறு பார்த்தால் தான் அனுமதியின்றி கற்கள் வெட்டப்பட்டதா என்று தெரியும் என்றால் சரிதான். அது பற்றி கனிம வள துறையிடம் கேட்க வேண்டும். பாறையின் அளவு எவ்வளவு என்று எனக்குத் தெரியாது. வெட்டி எடுக்கப்பட்ட பாறையின் அளவு பற்றி போலீசாரிடம் நான் கூறவில்லை. நான் பாறையை அளக்கவில்லை. போலீசாரிடம் 13.09.2012ம் தேதி புகார் கொடுக்கப்பட்டது. புகாரை நான் கொடுக்கவில்லை. காவல்நிலையத்தில் நான் போகவில்லை. தணிக்கை செய்யும் போது உரிமம் யார் பெயரில் இருந்தது என்று நான் பார்க்கவில்லை, எனக்குத் தெரியாது. நாங்கள் தணிக்கை எதுவும்

செய்யவில்லை என்றும் கனிம வளத்துறையால் போடப்பட்ட பொய் வழக்க என்றால் சரியல்ல.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC.234/2016**

**Deposition of P.W.** 3

Name : திருமதி. ஷபியா

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:**23.10.2024**

Accused Present

<u>முதல் விசாரணை</u>–

நான் தற்போது விழுப்புரம் மாவட்ட புவியியல் மற்றும் சுரங்கதுறையில் உதவி இயக்குனராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் கன்னியாகுமரி மாவட்டத்தில் 2011ம் ஆண்டு உதவி பூவியியலாளராக பணிபுரிந்த போது 13.09.2012ம் தேதியன்று துணை இயக்குநர் கனிமம், கல்குளம் வட்டாட்சியர், நில அளவர், வேளிமலை கிராம நிர்வாக அதிகாரி ஆகியவர்களுடன் வேளிமலை கிராமம் சோழப்புரம், கொற்றிக்கோடு அருகே புல எண்.3/4பி–யில் கூட்டு புலத்தணிக்கை செய்தோம். கூட்டுப்புலதணிக்கையின் போது அனுமதியின்றி புதிதாக கற்களை உடைத்து வந்தது தெரிய வந்தது. அதனை தொடர்ந்து துணை இயக்குநர் கனிமம் அவர்களின் அறிவுரையின் பேரில் 07.11.2012 அன்று நில அளவர் மற்றும் கிராம நிர்வாக அலுவலருடன் அனுமதியின்றி கற்கள் எடுக்கப்பட்ட புல எண்.3/4பி–யில் ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வின் முடிவில் 14667

யூனிட் கற்கள் வெட்டி எடுக்கப்பட்டது தெரிய வந்தது. இது சம்மந்தமாக நான் ஒரு தணிக்கை குறிப்பு வழங்கினேன். அந்த அறிக்கை அ.சா.ஆ.2. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

சம்பவ சமயம் எங்கள் அலுவலகம் நாகர்கோவிலில் இருந்தது. தணிக்கை செய்த புல எண்ணில் ஒரு ஓரத்தில் கல்குவாரி இருந்தது என்றால் சரிதான். 21.09.2011 முதல் நாகர்கோவில் கனிம வளத்துறை அலுவலகத்தில் உதவி புவியியராளராக வேலை பார்த்தேன். என்னிடம் இருப்பது போலீசாரிடம் நான் எழுதி கொடுத்த வாக்குமூலம் ஆகும். நான் வைத்துள்ள வாக்குமூலம் அழைப்பாணை பெறப்பட்ட பிறகு காவல்நிலையத்திலிருந்து எனக்கு கொடுக்கப்பட்டது ஆகும். வாக்குமூலத்தில் உள்ள படி சாட்சி சொல்ல வேண்டுமென்பதற்காக எனக்கு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அதனை நான் தெளிவாக படித்து கொண்டேன். உடைக்கப்பட்ட தரையின் விஸ்தீர்ணம் என்ன என்று எனக்குத் தெரியாது. சர்வேயர் அளந்தார், நான் அளக்கவில்லை. கல்குவாரிக்கு எதிரிக்கு முன்பாக எதிரியின் கணவரின் பெயரில் உரிமம் வழங்கப்பட்டிருந்தது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. நிலத்தின் பட்டா எதிரி பெயரில் இருந்தது தெரியும். பட்டாவை பார்த்து தெரிந்து கொண்டேன். நிலம் ஒருவர் பெயரிலும், கல் உடைக்கும் உரிமம் வேறு ஒருவர் பெயரிலும் இருக்கலாம். கல் உடைக்கும் உரிமம் தொடர்பான ஆவணங்களை போலீசார் என்னிடமிருந்து பெறவில்லை. அரசு உரிமம் வழங்கப்பட்டு அதன் அடிப்படையில் கல் உடைக்கப்பட்டது என்றால் ஆவணங்களை பார்த்தால் தான் கூற முடியும். கல் உடைக்கும் உரிமம் யார் பெயரில் இருந்தது என்று ஆவணங்களை பார்த்தால் தான் கூற

முடியும். உரிமம் இருந்த போது எந்த அளவு கல் உடைக்கப்பட்டிருந்தது என்பது பற்றி ஆவணங்களை பார்த்தால் தான் கூற முடியும். அரசு உரிமத்தை மீறி அதிக அளவு கல் உடைக்கப்பட்டதா என்பது ஆவணங்களை பார்த்தால் தான் கூற முடியும் என்றால் தற்போது சொல்ல முடியாது. இதற்கு முன்பு எதிரியின் கணவர் பெயரில் உரிமம் இருந்ததா என்று ஆவணங்களை பார்த்தால் தான் கூற முடியும். தாசில்தார் அறிக்கை மற்றும் நில அளவையர் கொடுத்த அறிக்கையின் அடிப்படையில் நானும் அறிக்கை கொடுத்தேன். அதன் படி தான் நான் தற்போது சாட்சி சொல்கிறேன். நான் சொன்னபடி ஆய்வு செய்யவில்லை என்றால் சரியல்ல. கல் உடைத்ததற்கும், எதிரிக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல,